Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

**Sessions Case No. 17 of 2021**

**Deposition of P.W.16 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : **மருத்துவர் கோகுலரமணன்** | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of March 2025.

(Accused absent. For Accused, petition U/s.317 Cr.P.C is filed and allowed.)

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் பேராசியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.1.2015ந் தேதியன்று நான் அதே துறையில் பணியிலிருந்த போது பரமத்தி காவல் நிலைய ஆய்வாளர் அவர்களிடமிருந்து குற்ற எண்.15/2015 என்ற வழக்கில் சம்மந்தப்பட்ட 50 வயது நிறைந்த குப்புசாமி என்கிற ஆண் பிரேதத்தை சடல கூறாய்வு செய்ய கொடுத்த வேண்டுகோள் கடிதத்திற்கிணங்க நானும் நாமக்கல் மருத்துவமனை மருத்துவர் கண்ணன் அவருடன் சேர்ந்து அன்றைய தினமே மதியம் 2.35 மணிக்கு சடலகூறாய்வை ஆரம்பித்தோம்.

<u>வெளிப்புற கூறாய்வு:</u> கீழ்கண்ட வெளிப்புற காயங்கள் காணப்பட்டன. 1) வலப்பக்க நெற்றியிலிருந்து தலையின் பின்பகுதி வரை கிழிந்த காயம் 23 X 15 செ.மீ X உட்புற மூளை ஆழம் வரை காணப்பட்ட அந்த காயத்தின் பகுதியில் உள்ள கபாலம் நொருங்கி அதன் உட்புறம் உள்ள மூளை பகுதி சிதைந்து காணப்பட்டது. 2) வலபக்க கண் மற்றும் கன்னம் ஆகிய பகுதிகளின் ஒரு கருமையான சிவந்த சிராய்பு காயம் 10 X 5 செ.மீ அளவில் காணப்பட்டு அதன் மேல்பகுதியில் ஒரு கிழிந்த காயம் 9 X 4 X 1 செ.மீ காணப்பட்டு அதன் அடிப்பகுதியில் உள்ள கபாலம் நொருங்கிய காணப்பட்டது. 3) தாடையின் நடுப்பகுதியின் ஒரு கிழிந்த காயம் 10 X 11 X 1 செ.மீ அளவில் காணப்பட்டு அதன் அடிப்பகுதியில் உள்ள தாடை எலும்பு நொருங்கி காணப்பட்டது. 4). இரண்டு பக்க மார்பு பகுதி மற்றும் வலப்பக்க கைபுஜம் ஆகிய இடங்களில் தீகாயங்கள் காணப்பட்டன. 5) வலப்பக்க கை முட்டி பகுதி மாறுப்பட்ட தோற்றத்துடன் காணப்பட்டது அந்த பகுதியை கூறாய்வு செய்து பார்த்ததில் அந்த பகுதியின் கை மூட்டு எலும்புகள் நொருங்கி அதனை சுற்றியுள்ள பகுதிகள் கன்றிய நிலையில் காணப்பட்டது. 6) வலது முன்னங்கையில் ஒரு கிழிந்த காயம் 1 X 1 X 0.5 செ.மீ அளவில் காணப்பட்டு அதன் அடிப்பகுதியில் உள்ள எலும்புகள் நொருங்கி காணப்பட்டன. 7) பாலுறுப்பின் வலது

பக்கத்தில் ஒரு கிழிந்த காயம் 24 X 12 X எலும்பு ஆழம் அளவில் காணப்பட்ட அந்த காயத்தின் அடிப்பகுதியில் உள்ள எலும்புகள் நொருங்கி காணப்பட்டன. 8) வலப்பக்க தொடை மற்றும் இடப்பக்க தொடை ஆகிய பகுதியில் தீ காயங்கள் காணப்பட்டன. இடது தொடை பகுதி மாறுப்பட்ட தோற்றத்துடன் காணப்பட்டது. அதனை பிளந்து ஆய்வு செய்து பார்த்ததில் அந்த தொடை எலும்பு முறிந்து காணப்பட்டது. 9) இடது ஆள்காட்டி விரலின் கீழ்பகுதியில் ஒரு கிழிந்த காயம் 2 X 1 X தசை ஆழம் அளவில் காணப்பட்டது. அதனை சுற்றியுள்ள சதை பகுதிகள் கன்றிய நிலையில் காணப்பட்டன.

<u>உட்புற கூறாய்வு :</u> தலைப்பகுதியை கூறாய்வு செய்து பார்த்ததில் கபலாத்தின் அடிப்பகுதி நொருங்கி காணப்பட்டது. மற்ற காயங்கள் வெளிப்புறங்களிலேயே கூறப்பட்டுள்ளது. கழுத்து பகுதி உள்உறுப்புகள் இயல்பான நிலையில் காணப்பட்டது. மார்பு பகுதி இடப்பக்க மார்பு கூட்டு எலும்புகள் 1 முதல் 3 வரை, 7 முதல் 9 வரை அதன் மத்திய பகுதியில் முறிந்து அதனை சுற்றியுள்ள தசை பகுதிகள் கன்றிய நிலையில் காணப்பட்டன. இருதயம் காலியாக இருந்தது. இரண்டு பக்க நுரையீரல்களும் வெளிறி காணப்பட்டன. வயிற்று பகுதி இரைப்பையில் சுமார் 150 மில்லி பழுத்த திரவம் எந்த வித குறிப்பிட்ட வாடை இன்றி காணப்பட்டது. கல்லீரலின் வலப்பகுதி சிதைந்து காணப்பட்டது. மண்ணீரலின் கீழ் பகுதி முழுவதுமாக சிதைந்து காணப்பட்டது. இரண்டு பக்க சிறுநீரங்களும் வெளிறி காணப்ட்டன. பாலுறுப்பு, இடுப்பு எலும்பு, முதுகு தண்டுவடம் இயல்பான நிலையில் காணப்பட்டன. உடல் உள்ளுறுப்புகளை சேகரம் செய்து பதப்படுத்தி ரசாயன பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ரசாயன பரிசோதனை அறிக்கை வேண்டி இறப்பின் காரணத்திற்கான கருத்து நிலுவையில் வைக்கப்பட்டது. இறப்பிற்கான காலம் மேற்சொன்ன இறந்த நபர் சடல கூறாய்விலிருந்து 18 முதல் 24 மணி நேரத்திற்குட்பட்ட காலத்தில் இறப்பு நேர்நிதிருக்கலாம் என்று கருத்து தெரிவித்து சான்று வழங்கினோம். இறுதி கருத்துரை மேற்சொன்ன இறந்த நபர் அவருக்கு ஏற்பட்ட பல்வேறு காயங்களின் விளைவாக ஏற்பட்ட அதிர்ச்சியினாலும் ரத்த வெளியேற்றத்தினாலும் இறந்து நேர்திருக்கலாம் என்று கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன். நான் குப்புசாமிக்கு வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7. நான் வழங்கிய இறுதி கருத்துரை அ.சா.ஆ.8.

அதே தேதியில் மேற்படி வழக்கு சம்பவத்தில் இறந்து போன பெரியகவுண்டர் மற்றும் கருப்பண்ணன் ஆகியோரது பிரேதத்தை ஆய்வாளரின் வேண்டுகோளின் கடிதத்தின் படி பிரேத பரிசோதனை செய்தேன். மேற்படி நபர்களும் உடல் கூறாய்விற்கு முன்னர் 18 முதல் 24 மணி நேரத்திற்குள் இறந்திருக்கலாம் என்றும் மேற்படி நபர்கள் அவர்களுக்கு ஏற்பட்ட பல்வேறு காயங்களின் விளைவாகவும் அதிர்ச்சியினாலும் ரத்த போக்கினாலும் இறந்திருக்கலாம் என்று கருத்து தெரிவித்து இறுதி கருத்துரை வழங்கினேன். நான் பெரியண்ணகவுண்டருக்கு வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் இறுதி கருத்துரை அ.சா.ஆ.9 மற்றும் 10. நான் கருப்பண்ணன் என்பவருக்கு வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் இறுதி கருத்துரை அ.சா.ஆ.11 மற்றும் 12. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். கேஸ் சிலிண்டரில் கசிவு ஏற்பட்டு மின் கசிவின் காரணமாக வெடித்து சிதறும் போது மேற்படி இறந்து போன நபர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் இறந்த நபர்களுக்கு ஏற்பட்டிருந்த தீ காயங்களின் நீள அகல அளவை குறிப்பிடவில்லை. வேறு காரணமாகவும் இறந்தவர்களுக்கு காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் வெடி விபத்தினால் ஏற்பட வாய்ப்புண்டு.

மறு விசாரணை : இல்லை.